உயர் கல்வி துறை
தபால்
20 SEP 2024
சென்னை – 600 009
தலைமைச் செயலகம்

மனித வள மேலாண்மைத்
(பயிற்சி-1) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.
குரோதி, ஆவணி 30,
திருவள்ளுவர் ஆண்டு 2055.

33

கடித எண். 8296206 /பயிற்சி-1/2024-1, நாள் 15.09.2024

அனுப்புநர்
திரு. க. நந்தகுமார், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
அனைத்துத் துறை அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர்கள் /
முதன்மைச் செயலாளர்கள் / செயலாளர்கள்,
தலைமைச் செயலகம், சென்னை - 600 009.
அனைத்து துறைத் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

ஐயா / அம்மையீர்,

பொருள்: பயிற்சி - அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர் - பணி மாறுதல் மூலம் பணிநியமனம் செய்யப்படும் இளநிலை உதவியாளர்கள் - பணிவரன்முறைக்கு காத்திராமல் அடிப்படைப் பயிற்சி வழங்குதல் - துறைத் தலைவர்களுக்கு அறிவுறுத்தல் - தொடர்பாக.

பார்வை: அரசுக் கடித எண். 6197819/பயிற்சி-1/ 2023-1, மனித வள மேலாண்மைத் (பயிற்சி-1) துறை, நாள் 01.02.2024.

.....

பார்வையில் காணும் கடிதத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, துறைத் தலைவரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிந்து வரும் இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்கள் மற்றும் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெறும் இளநிலை உதவியாளர்கள் அவர்களின் பணிவரன்முறை ஆணை வெளியிடும்வரை காத்திருக்காமல், முதுநிலை அடிப்படையில், அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகரில் வழங்கப்படும் அடிப்படைப் பயிற்சிக்கு அனுப்பி வைக்க அனைத்துத்துறை செயலாளர்கள் வழியாக துறைத் தலைவர்களுக்கு அறிவுறுத்தம் வழங்கப்பட்டுள்ளது.

2. மேற்காணும் அறிவுறுத்தத்தின் தொடர்ச்சியாக, பணிமாறுதல் மூலம் (Recruitment by transfer) பணிநியமனம் செய்யப்படும் இளநிலை உதவியாளர்கள் அவர்களின்

(த.பி.பா)

பணிவரன்முறை ஆணை வெளியிடும்வரை காத்திருக்காமல், முதுநிலை அடிப்படையில், பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் வழங்கப்படும் அடிப்படைப் பயிற்சிக்கு அனுப்பி வைக்குமாறு துறைத் தலைவர்களுக்கு அறிவுறுத்தம் வழங்கப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

16/9/2024

அரசு செயலாளருக்காக.

16/9/24.

**நகல்:**

பயிற்சித் துறைத் தலைவர்,
எண்.163/1, பி.எஸ். குமாரசாமி இராஜா சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை- 600 028.
முதல்வர் / மாவட்ட வருவாய் அலுவலர்,
அரசு அலுவலர் பயிற்சி நிலையம்,
பவானிசாகர், ஈரோடு மாவட்டம் - 638 451.
மனித வள மேலாண்மைத் (பி) துறை,
தலைமைச்செயலகம், சென்னை - 600 009.